**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 383/2025**
**வழக்கு சாட்சி PW-4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தமிழ்மணி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | பாலகிருஷ்ணன் | தொழில் | : | தனியார் வேலை |
| கிராமம் | : | நல்லூர் | வயது | : | 24 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 12.03.2026.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் நல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். அத்தாட்சியிலுள்ள கையெழுத்து என்னுடையதல்ல. சுமார் 2 வருடங்களுக்கு முன்பு மாலை சுமார் 03.00 மணியளவில் நல்லூரில் எனது நண்பர் தியாகராஜன் வீட்டில் வேலை செய்து கொண்டிருந்தபோது, நான் அந்த கையெழுத்தை போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க காவல்நிலையத்தில் வைத்து போட்டு கொடுத்தேன். அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் எனக்கு தெரியாது. பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.2** ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி  கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 26.03.2023ம் தேதி, 19.30 மணிக்கு போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றால் சரியல்ல. அதில் நானும், சேர்மத்துரை என்பவரும் கையெழுத்து செய்தோம் என்றால் சரியல்ல. பின்னர் அன்றைய தினம் 20.30 மணிக்கு சம்பவயிடத்தில் வைத்து இரத்தம் பட்ட மண், இரத்தம்படாத மண், இரத்தக்கறை படிந்த செருப்பு ஒரு ஜோடி ஆகியவற்றை அத்தாட்சியில் போலீசார் கைப்பற்றினார்கள் என்றால் சரியல்ல. பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் கையெழுத்து செய்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது அதற்கு மாறாக எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.03.13 18:30:14 +0530